நாள்.04.03.2023

**அசல் வழக்கு எண். 9/2018**

<u>வா.சா.1 - பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வாதி சித்திநயிமா எனது மனைவி என்றால் சரிதான். வழக்கு சொத்து வாதிக்கு சொந்தமானது என்ற அடிப்படையில்தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி சித்திநயிமா எனது மனைவியை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்காமல் இருக்க என்ன காரணம் என்பதை பொறுத்து எனது முதன்மை வாக்குமூலத்தில் ஏதும் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா வழக்கு சொத்தை பொறுத்து வாதிக்கும் எனது சகோதரருக்கும் இடையே பட்டுக்கோட்டை சார்பு நீதிமனறத்தில் அ.வ.எண்.3/2010 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். தாவா வழக்கில் எனது சகோதரர் அபுல்கஷன் என்பவரை ஒரு தரப்பினராக சேர்த்து வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. தாவா வழக்கு சொத்து எனது மனைவிக்கு சொந்தமானது என்பதை காட்ட பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து எனது தாத்தாவிற்கு பரம்பரை சொத்து என்பதால் உரிமை ஆவணங்கள் இல்லை. வழக்கு சொத்திற்கு வருவாய் துறை ஆவணங்களான பட்டா, சிட்டா சித்தி நயிமா பெயரில் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து எனது மனைவி அனுபத்திலும், சுவாதீனத்திலும் உள்ளதை என்பதை பொறுத்து ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து எனது கட்சிப்படி S.M.K.N முகமது அபுல்கஷன் மரைகாயருக்கு பாத்தியப்பட்ட குடும்ப சொத்துக்களில் ஒன்று என்பது எனது கட்சி. மேற்படி S.M.K.N முகமது அபுல்கஷன் மரைகாயருக்கு S.M.S சேக் ஜலாலுதின், பாத்திமா அம்மாள் ஆகியோர்கள் மட்டும்தான் வாரிசுகள் என்றால் சரிதான். எனது நிருபணவாக்குமூலத்தில் S.M.K.N முகமது அபுல்கஷன் மரைகாயருக்கு சொந்தமான சொத்துக்களை 1970ம் ஆண்டு வாய்மொழியாக பாக பிரிவினை செய்தபோது வழக்கு சொத்தும் மற்றும் மற்றொரு சொத்து மட்டும் , பாத்திமா அம்மாளுக்கு கொடுக்கப்பட்டு அவரால் ஏகதேசமாக அனுபவம் செய்துவரப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாய்மொழி பாகப்பிரிவிக்கு பிறகு இதுநாள் வரை வழக்கு சொத்தும் மற்றும் மற்றொறு சொத்தும் பாத்திமா அம்மாளுக்கு

ஒதுக்கப்பட்டதாக காண்பிப்பதற்கோ, அவர் அனுபவம் செய்து வந்தது குறித்து காண்பிப்பதற்கோ எந்தவிதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. S.M.S சேக் ஜலாலுதின் என்பவருக்கு 10 பேர் வாரிசுகள் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சபீனா அம்மாள் என்பவர் S.M.S சேக் ஜலாலுதின் என்பவரின் மகள் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தின் 3 வது பாராவில் S.M.S சேக் ஜலாலுதின் குடும்ப சொத்துக்களை பொறுத்து 05.06.1988 ம் தேதியில் செய்துக்கொள்ளப்பட்ட குடும்ப ஏற்பாடு பத்திரத்தில் வழக்கு சொத்தும், மற்றொரு சொத்தும் கண்டு எழுதப்படவில்லை என்பதால் வழக்கு சொத்தும், மற்றொரு சொத்தும் பாத்திமா அம்மாளுக்கு சொந்தமான சொத்து என்று நாங்கள் கட்சி செய்கிறோம் என்றால் சரிதான். 05.06.1988 ம் தேதியில் ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டு பத்திரத்தை தாவா வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் அது போட்டோ நகல் என்பதால் குறியீடு செய்யவில்லை. பாத்திமா அம்மாளுக்கு மேற்கு நான்கெல்லையில் முகமது மொய்தீன், அபுல்கஷன், அகமது ஜலில் ஆகியோர்களின் இடம் உள்ளது. தாவா வழக்கின் சர்வே எண் தெரியுமா என்றால் 316/1 ஆகும். எவ்வளவு விஸ்திரணம் என்றால் ஞாபகமில்லை. வழக்கு சொத்து எவ்வளவு விஸ்திரணம் என்பதை காண்பிப்பதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி அவரது குடும்பத்திற்கு சொந்தமான சொத்து புல எண்ணில்தான் செப்டிக்டேங் கட்டி முடித்துவிட்டார் என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதியால் கட்டப்பட்ட செப்டிக்டேங் அமைந்துள்ள புல எண்.317/6 ல் கட்டப்பட்டது என்றாலும், பிரதிவாதி வகையராவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யப்பட்ட அன்றே நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு அன்று மாலையே வழக்கு சொத்தை பார்வையிட்டு வரைபடத்துடன் கூடிய அறிக்கையை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அதே நீதிமன்ற ஆணையரை எதிர்வாதி தரப்பில் மீண்டும் நியமிக்ககோரி மனு கொடுக்கப்பட்டு மனு உத்தரவின் பேரில் செப்டிக்டேங் எந்த புல எண்ணில் வருகிறது என நில அளவையர் உதவியுடன் அளந்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் அந்த அறிக்கையை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில் செப்டிக்டேங் பிரதிவாதிகளுக்கு சொந்தமான புல எண்ணில்தான் உள்ளது என சொல்லியுள்ளார். ஆனால் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை நான் ஏற்றுக்கொள்ளவில்லை.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation
in open Court read over to the
witness admitted and acknowledged
by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,

District Munsif, Pattukkottai.